INDIAN JOURNAL OF TAMIL |Volume 1 |Issue 1 |Year 2020

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# சிலம்பில் அணிகலன்கள்

**மூ. சிந்து** [அ]

[அ] உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641048.

# Ornaments in Silambu

**M. Sindhu** [a, *]

[a] Department of Tamil, Dr.N.G.P. Arts and Science College, Coimbatore-641048, Tamil Nadu, India.

*Corresponding Author Email: sindujasms@gmail.com

(Received: 15th December 2019; Accepted: 18th Febuary 2020)

DOI: http://doi.org/10.34256/ijot2014

**Abstract:** Ornaments are worn in order to enhance the natural beauty. The ornaments worn by the people of the Sangam period were in harmony with their life-style. While we know that both men and women wore ornaments, it is interesting to witness that an epic emerged centralising one particular ornament, i.e., Silambu. Knowing the ornaments wore by the different characters in Silappathikaram and through them understanding the course of the epic are the aim of this work.

**Key Words:** Ornaments, Silappathikaram, Silambu, Sangam period, Life style.

## ஆசிரியர் குறிப்பு



இவர் கோவையில் உள்ள டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். 2016-18 கற்பகம் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியராகப் பணிபுரிந்தார். முருகாற்றுப்படை, சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு? என்னும் இரு புத்தகங்களை எழுதியுள்ளார்.

## முன்னுரை

அழகினை மேலும் அழகுறச் செய்யும் வகையில் அணியப்படுவது அணிகலன்கள்.பண்டைய மனிதர்கள் தன் உடலில் பல்வேறு உறுப்புகளில் அழகு சேர்க்கும் பொருட்டு அணிகலன்கள் அணிந்திருந்தமையைக் காணலாகிறது. பெண்கள் தன்னை அழகுறச் செய்வதில் விருப்பம் கொண்டவர்களாக இருந்ததையும், இருப்பதையும் காணமுடிகிறது. சிலம்பில் கதாப்பாத்திரங்கள் அறிமுகப்படுத்தும் நிலையானது அணிகலன்களுடன் அமைந்திருந்தமையைக் காணமுடிகிறது. காப்பியத்தின் தலைவி

கண்ணகிக்குத் தோழி அணிகலன் அணிந்ததும், கண்ணகி இறப்பிற்குப் பிறகு தெய்வ நிலையில் செங்குட்டுவன் அணிகலன் அணியப் பெற்ற நிலை சிறப்பிற்குரியதாகும். அத்தகைய சிறப்பினையுடைய அணிகலன்களைக் கொண்டு அவற்றின் சிறப்பினை அழகுற எடுத்தியம்புவதாக இக்கட்டுரையானது அமையப் பெறுகிறது.

## அணிகலன் வகைகள்

அணிகலன்கள் பல்வேறு வகையானப் பொருட்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டதைக் காணமுடிகிறது. ஆரம்பகாலக் கட்டங்களில் இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களான விதைகள், மரப்பட்டைகள் அவற்றினைத் துளையிட்டு அவற்றில் கயிறுகள் அல்லது நார்களைக் கோர்த்து அணிந்தமையைக் காணமுடிகிறது. பின்னாளில் அவை மாறிப் பலவகையானப் பொருட்களில் அணிகலன்கள் செய்யப்பட்டதைச் சான்றுகள் வாயிலாக நாம் அறியலாம். வெள்ளி, முத்து, பவளம், வைரம் போன்ற பொருட்களில் அணிகலன்கள் விரும்பி அணிந்தமையைக் காப்பியங்கள் எடுத்துக்கூறுகின்றன. பின்னர் பொன், வெள்ளி இவற்றிலும் அணிகலன்கள் செய்தமையைக் கொண்டு இது அணிகலன்களில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையாகக் காணலாம். அணிகலன்களில் மிகப் பழமையாகக் கருதப்படுவது ஓட்டினால் செய்த அணிகலன்கள் என்பதைச் சான்றுகள் புலப்படுத்துகின்றன (Chandrababu, 2011; And Palampal, 1998; Vijaya Ramaswamy, 2007)

.

## அணிகலன்களும் பண்பாடும்

மங்கல அணி அணிந்து மங்கல விழாவிற்குச் செல்லுதல் என்பது தம்மிழர்களின் மரபாகும். அணிகலன்கள் பூண்ட பெண்கள் யனையானது எருத்தத்தில் அமர்ந்து திருமண அறிவிப்பை வெளிப்படுத்த புறநகருக்குச் சென்ற செய்தியை சிலப்பதிகாரம் சுட்டுகிறது.

மகளிர் திருமணத்தின் போதும், மற்ற விழாக்களின் போதும் தம்மைத் தாமே அலங்கரித்துக் கொள்வதும்,பிறர் அலங்கரித்து விடுவதும் வழக்கமாக இருந்தமையைக் காணமுடிகிறது.

**திங்கள் முத்திரும்பவும் சிறுகிடை வருந்தவும்**

**இங்கிவை அணிந்தனர் என்றுற்றனர் கொல்** **சிலம்பு 2.71-72**

என்னும் வரிகள் கண்ணகிக்குப் பிறர் ஒப்பனை செய்தமையை குறிப்பிடுகின்றது.

கண்ணகியின் அழகுத் திறத்தைப் போற்றிப் பாராட்டும் கோவலன்

**மாசறு பொன்னே வலம்புரி முத்தே!**

**காசறு விரையே கரும்பெ தேனே!**

**அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே**

**பெருங்குடி வணிகன் பெருமட மகளே**

**மலையிடைப் பிறவா மணியே என்கோ**

**அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ**

**யாழிடைப் பிறவா இசையெ என்கோ**

**தாழிரங் கூந்தல் தையால் நின்னை** **சிலம்பு 2.73-80**

கண்ணகியை பொன், முத்து, மணம், கரும்பு,தேன் ஆருயிர் மருந்து என்றும், மலையிலிருந்து பிறக்காத அமிழ்தமாகவும், யாழிலிருந்து தோன்றாத இசையாகவும், கோவலன் புகழ்ந்து கூறும் திறமானது அணிகலன்களோடு இயைந்த கண்ணகியின் பண்பை உயர்த்திக் கூறுவனவாகும்.

அணிகலன்கள் பல்வேறு உறுப்புகளில் அணிந்து மேலும் அழகுறச் செய்யும் நிலையில் அவை கால்அணி, கழல் அணி, தொடை அணி, இடை அணி, தோள் அணி, கையணி, விரல் அணி, கழுத்தணி, காதணி, தலைஅணி, என்று வகைப்படுத்தப்பட்டன.

## கால் அணி

இன்று திருமணத்தின் போது பெண்கள் காலில் அணியும் மெட்டியான கால் மோதிரம் மாதவி அணிந்ததை சிலம்பு சுட்டுகிறது. கண்ணகி அணிந்த சிலம்பானது மாணிக்கம் பதித்தது. கண்ணகியின் காற்ச்சிலம்பு மதுரை மாநகரையே அழித்த நிலையை சிலம்பு எடுத்துக்கூறுகிறது. காலணியின் பெயராலே சிலப்பதிகாரம் பெயர் பெற்றது சிறப்பிற்குரிய ஒன்றாகும். மாதவி காலில் அணிந்த அணிகலனாக பரியகம், நுபுரம், பாடகம், சதங்கை, சிலம்பு ஆகியவை சுட்டப்படுகிறது.

**நலந்தகு மெல்விரல் நல்அணி செறீஇப்**

**பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை**

**அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து** **சிலம்பு 6.63-65**

என்னும் வரிகள் மாதவி காலுக்கு அழகு சேர்க்கும் வகையில் அணிகலன்கள் அணிந்ததை எடுத்தரைக்கிறது.

## கழல்

ஆண்கள் காலில் அணிவதை கழல் என்பர். இது வீரக்கழல் என்றும் வழங்குவர். மன்னர்கள் தம் காலில் அணிவது அவர்களின் வீரத்தை எடுத்துக் கூறுவதாக அமைகிறது.

**முடிபுறம் உறிஞ்சும் கழல்கால் குட்டுவன்** **சிலம்பு 28.37**

வணங்கும் பகை மன்னனின் முடிகலன்கள் தேய்கின்ற வீரக்கழலை அணிந்தவன் செங்குட்டவன் என்றும்,

**கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே**

**குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே** **சிலம்பு 18.28-29**

வீரக் கழலணிந்துள்ள ஊர்க் காவலர்கள் கோவிலனைக் கொலை செய்யக் கருதினர் என்றும் வரியில் மன்னன் மட்டுமின்றி ஊர்க்காவலர்களும் கழல் அணிந்திருந்தமையைச்

சிலம்பு சுட்டுகிறது.

**சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி**

**வலம்படு கொற்றத்து வாய்வாய் கொற்றவை சிலம்பு 12.63-64**

என்னும் வரிகள் வாயிலாகப் பெண்களும் கழல் அணிந்திருந்தமையை எடுத்துக்கூறுகிறது.

## இடை அணி

**மேகலை என்பது இடையில் அணிவதாகும்.**

**அம்துகில் மேகலை அசைந்தன வருந்த சிலம்பு 4.30**

என்னும் வரி கண்ணகியானவள் அழகிய ஆடை மீது பவள வடமாகிய மேகலை அணிந்திருந்தமையை அறியமுடிகிறது.

**மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்**

**கொங்கை முன்றில் குங்கும்ம் எழுதாள் சிலம்பு 4.48-49**

கோவலனைப் பிரிந்த நிலையில் கண்ணகி மேகலை அணியாததன் வாயிலாக கணவனைப் பிரிந்த பெண்கள் மேகலையை அணியாதது புலப்படுகிறது.

**பிறங்கிய முத்திரை முப்பத்து இருகாழ்**

**நிறம்கிளர் பூந்துகில் நீர்மையில் உடீஇ சிலம்பு 6.87-88**

என்னும் வரிகள் மாதவி பெரிய முத்துக் கோவைகள் முப்பத்திரண்டாலான விரிசிகை என்னும் அணியை இடையில் தன் உடையின் மீது மேகலை அணிந்திருந்தமையைச் சுட்டுகிறது.

## தோள் அணி

ஆண் பெண் இருவரும் தோளில் அணிகலன்கள் அணிந்தனர். தோளில் அணியப்படும் அணிகலன் வாகுவளையம் என்று அழைக்கப்படுகிறது.

**என்றனன் வெய்யோன் இலங்குஈர் வளைத்தோளி சிலம்பு 6.87-88**

**சூடக வரிவளை ஆடமைப் பணைத்தோள் சிலம்பு 27.184**

**தூமணித தோள்வளை தோளுக்கு அணிந்து சிலம்பு 6.90**

**தொடித்தோள் துடுப்பில், துழைஇய ஊன்சோறு சிலம்பு 26.243**

மேற்கூறிய வரிகளில் தோள்களில் அணியப்படும் அணிகலன்களை எடுத்துக் கூறுகிறது. தோல் அணியானது அச்சத்தைப் போக்குவதற்காக அணிந்த குறிப்பும் சிலப்பதிகாரத்தில் சுட்டப்படுகிறது.

## கையணி

கைகளில் அணியும் அணிகலன் வளையல். இது வளைந்து இருக்கும் காரணத்தால்

இப்பெயர் பெற்றது. வளையல் - நுழைவளை என்றும் கூறுவர். கையில் நுழைத்துப் போடுவதால் இப்பெயர் பெற்றது.

**சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை**

**பரியகம் வால்வளை பவழப பல்வளை சிலம்பு** 6.92.93

மாதவி தம் கைகளில் செம்பொன்னாலான வளையலையும், நவமணி வளைகளை தம் முன்னங்கையில் மாதவி பொருத்தமுற அணிந்ததை சிலம்பு எடுத்துரைக்கிறது.

## கழுத்தணி

கழுத்துப் பகுதியை பெண்கள் ஞான், சங்கிலி, கோவை, துகிற் கோவை, ஆரம், முத்தாரம் தொடர், மங்கல அணி, தாலி, முத்துமாலை என்றும் பல்வகையான அணிகலன் வாயிலாக அழகுபடுத்திக் கொண்டனர். ஆரம் என்பது மாலை போன்றதாகும்.

**மலயத்து ஆரமும் மணிமுத்து ஆரமும்**

**அலர்முலை ஆகத்து அடையாது வருந்த சிலம்பு** 6.92.93

கணவனைப் பிரிந்த பெண்கள் மணிமுத்தால் ஆன கோவையை (மாலையை) தன் மார்பில் அணியதாது துயர்நிலையை எடுத்துரைக்கிறது.

**சங்கிலி நுண்தொடர் பூண்ஞான் புனைவினை**

**அம்கழுத்து அகவயின் ஆரமோடு அணிந்து**

**கயிற்கடை ஒழுகிய காமர் தூமணி**

மாதவி வீரச்சங்கிலியும், நுண்ணிய சங்கிலியும், பூணும் சரமும். வேலைப்பாடமைந்த சவடி, சரப்பளி ஆகியவற்றைக் கழுத்தில் இருந்த முத்தாரத்தடன் அணிந்து கொண்டாள் என்பதை சிலம்பு கூறுகிறது.

## காதணி

காதில் அணியும் அணியானது வைரங்கள் பதிக்கப் பெற்று நீலக் குதம்பையாக இருந்தது. காதில் அணிகலன்கள் எல்லா நேரங்களிலும் அணிந்திருந்தனர்.

**அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை எழுதிய**

என்றும் வரி மாதவி கோவலனைப் பிரிந்த நிலையில் பொன்னால் ஆகிய தோட்டினை அணிந்திருந்தாள் என்பதும் தெரிகிறது.

**தீது இயல் கானம் செலஅரிது என்று**

**கோவலன் தன்தொடும் கொடுங்குழை மாதொடும்**

என்னும் வரி கொடிய காட்டினிடத்தே கோவலனோடு செல்லும் கண்ணகி வளைந்து காதணி அணிந்திருந்தமை தெரிகிறது.

காதணி ஆண், பெண் இருவரும் அணிந்தனர் என்பது,

**விரிவெண் தோட்டு வெண்நகைத் துவர்வாய்ச்**

சேரன் செங்குட்டுவன் காதில் தோடு அணிந்திருந்த்தன் வாயிலாகப் புலப்படுகிறது.

## தலையணி

தலையில் கூந்தலை அலங்கரிக்க அணியப்பட்ட அணி தலையணி ஆகும். தலையில் தொய்யகம்,தெய்வ்வுத்தி, வலம்புரி, புல்லகம் என்றும் பலவகை அணிகள் அணிந்தமையைக் காணமுடிகிறது.

**தெய்வ உத்தியோடு செழுநீர் வலம்புரி**

**தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கு அணி சிலம்பு** 6.106-107

மேற்கூறிய வரிகள் உறுதிபடுத்துகின்றன.

## முடிவுரை

சிலப்பதிகாரம் சிலம்பினை மையமாகக் கொண்டு உருவானதாலும், அணிகலன் ஒன்று ஒரு காப்பியம் உருவாக மையமாக அமையப் பெற்றதும் சிறப்பிற்குரியதாகும். அணிகலன்கள் அழகுபெற மட்டுமின்றி, அடையாளமாகவும் அமைந்திருந்தமையை உணரமுடிகிறது. மன்னன் மக்கள் என அனைவரும் அணிகலன் அணிந்திருந்தனர். காலத்திற்கு ஏற்ப அணிகலன் அமைந்திருந்தது. அணிகலன் வாயிலாக (முத்து, பவளம்) நாட்டின் சிறப்பு அறிய முடிகிறது. அணிகலன்கள் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமையப் பெற்றமையை உணரமுடிகிறது. உடலின் பல்வேறு உறுப்புகளில் அணியப் பெற்ற அணிகலன்கள் அழகிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் அணிந்திருந்தமையைக் காணமுடிகிறது. துயரமான நேரங்களில் பெண்கள் அணிகலனால் தன்னை ஒப்பனை செய்து கொள்ளாத நிலை என்பது குறிப்பிடத்தக்கது. அணிகலன்கள் மக்கள் வாழ்க்கை நிலையில் ஒன்றிணைந்த ஒரு அங்கமாக விளங்கியதும், ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக அணிகலன்கள் அமைந்திருந்ததன் பொருட்டு அணிகலன் சிறப்புத் தன்மையும், அது மதிப்பீட்டுப் பொருளாகவும் இருந்ததை உணரமுடிகிறது.

## References

And Palampal, (1998) Studies in the History of the Sangam Age, Kalinga Publications, New Delhi, India.

Chandrababu, B.S., Ganeshram, S., Bhavani C., (2011) History of People and Their Environs, Essays in Honour of Prof. B.S. Chandrababu, Bharathi Puthakalayam,

Gnanambal, K., (1947) Home Life Among the Tamils in the Sangam Age, Printed at the Central Art Press, Chennai, India.

Vijaya Ramaswamy, (2007) Historical Dictionary of the Tamils (Historical Dictionaries of Peoples and Cultures), Scarecrow Press, USA.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License